கரையை பலப்படுத்தினால் தண்ணீருடைய கொள்ளளவும் அதிகப்படும், மற்ற மாவட்டங்களைப்போல பெருமளவு மண்ணை வேறு எங்கும் போட முடியாவிட்டாலுங்கூட, கரைகொள்ளும் அளவுக்குச்செய்ய பரீட்சார்த்தமாகவாவது ஒரு திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே. அதிலேயும் சில சிக்கல்கள் இருக்கின்றன. கரை கொள்ளும் அளவிற்கு அதிகமாக ஆக்கலாம் என்றால், பாசனத்திற்கு இருக்கின்ற பூமி ரொம்ப மேடான இடத்திலே இருக்கிறது. இதை எவ்வளவு அதிகமாக ஆக்கினாலும், கீழே தண்ணீர் போய்ப் பாய்வதில் சங்கடம் இருக்கிறது. இருந்தாலும் அங்கு அவர்கள் சொல்கின்ற யோசனையை ஆராய்ந்து, இந்த இலாகாவைப் பரிசீலிக்கச் சொல்கிறோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, விவசாயிகள் இதை உரங்களாகப் பயன் படுத்தினால் ஏதாவது ஆட்சேபணை இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அதை எடுத்துக் கொள்வது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இது வண்டல் மண். வண்டல் மண்ணை உரம் போல உபயோகிக்கலாம். உரம் விற்கின்ற விலையிலே கம்போஸ்ட் உரம் மாதிரி நிறைய ஜனங்கள் ஆசைப்பட்டு இதனை உபயோகப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி யாராவது விவசாயிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்தால், அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அரசாங்கமும் தடுக்காது.

Desilting the Kandarathithan Tank in Ariyalur Taluk

*152 *Q.* THIRU C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the Government have received any request to desilt the Kandarathithan Tank, Ariyalur Taluk, Tiruchirappalli District; and

(*b*) if so, the action taken thereon by the Government?

அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன்
ஏரியை தூர் எடுத்தல்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியை தூர் எடுக்கும்படி அரசுக்கு கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தலப் பொறியாளர் தயாரித்து முடியும் நிலையில் உள்ளது.

Primary Marketing Societies.

*153 Q. THIRU D. SANTOSHAM (on behalf of Thiru D.V. D'Monte) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) the number of Primary Marketing Societies registered in Tamil Nadu during the calendar years from 1971 ; and

(*b*) the number of societies which are (i) doing business and (ii) defunct now?

தொடக்க விற்பனைச் சங்கங்கள்.

திரு. டி. சந்தோஷம் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு உணவு–கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் எத்தனை தொடக்க விற்பனைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவற்றில் (1) தற்போது செயல்படும் சங்கங்கள் எத்தனை ? (2) செயலற்றுப் போன சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 9 சங்கங்கள்.

(இ) (1) 4 சங்கங்கள்.

(2) 3 சங்கங்கள்.